முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1494

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.11.2023,** புதன்கிழமை

1. தர்மராஜனே அரங்கா வாழ்க
தவபலம்கொண்ட தேசிகா வாழ்க
வருமுலகில் ஞான ஆட்சி படைக்க
வையகத்தையே ஞான வழி நடத்தும் குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 15 ம் நாள், 01.11.2023, புதன்கிழமை)
ஊழ்போக்கி உலகோர் அனைவருக்கும்
உண்மை நிலை உணர்த்தி இனிதே ஞானவானாக
3. வாழ்வெல்லாம் ஞானிகளாக நிலை உயர
வரம் தருகின்ற குருராஜனே அரங்கனே
அரங்கனே உன் அவதாரம் சிறப்பு
அரங்கனே உன் அவதாரத்தில் ஆறுமுகன் யான்
4. வரங்கள் கூட்டி உன்னோடு சூட்சுமமாய் இருந்து
வையகத்தையே வழி நடத்தி வருகின்றேன்
வருகவே அரங்கன் தொண்டர்படைக்கு வல்லமையான பலம்கூட்டி இனிதே
வரும் காலத்தையே மாற்றும் மகா சக்தி தந்து வருகின்றேன்
5. வருகவே இந்த பேருலகம் அரங்கன் சீடர் படை பெருகப்பெருக
வளர்ச்சி கண்டும் வல்லமைகண்டும்
முருகப்பெருமான் என் தலைமை கொண்ட
முழுமையான ஞானவான்கள் ஆளுமை காணுகின்ற உலகமாக
6. ஆகவே மாற்றம் கண்டு ஞான சித்தர் காலமும்
வகைபட கலியுகத்தில் அரங்கேறும்
வல்லமை பட கலியுகமே
ஞான யுகமாக மாற்றம் பெறும்

7. மாற்றம் காண உலகோர்
மகான் அரங்கன் திருவடி பற்றினால் போதும்
ஆற்றல்பட அனைத்தும் நடக்கும்
அகிலத்துக்கு ஞான ஆட்சி உருவாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–